<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

**OS – 200/2021**

நாள் 25.08.2025

DW2 – சரவணன்

த/பெ – சாமிநாதன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of August 2025)**

<u>குறுக்கு விசாரணை</u>

1. 1,2 வாதிகள் எனது அத்தைகள் என்றால் சரிதான். வாதிகள் பாகம் கேட்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் மூலம் லட்சுமண கவுண்டர் தாவா சர்வே எண்.351 காலையில் 3 ஏக்கர் நிலத்தை துண்டியம்மாள் வகையறாவிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் இல்லை, 1 ஏக்கர் மட்டும் தான் லட்சுமண கவுண்டர் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா 7 முதல் 11 அயிட்ட சொத்துக்களை லட்சுமண கவுண்டர் அவருக்கு பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. எனது தாத்தா ராமசாமி கவுண்டருக்கு விவசாய தொழிலை தவிர வேறு தொழில் கிடையாது என்றால் சரியல்ல. கரும்பு வெல்லம் பிடிக்கும் ஆலை வைத்து சம்பாதித்து சொத்தை வாங்கினார். எனக்கு தற்போது 40 வயதாகிறது. நான் பிறப்பதற்கு முன்பாக சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட ஆவணங்கள் பற்றிய விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். லட்சுமண கவுண்டருக்கு எனது தாத்தா ராமசாமியுடன் 7 பேர் பிறந்தார்கள்.

2. எனது தாத்தா ராமசாமி கவுண்டரும், அவருடைய சகோதரர் மாரப்ப கவுண்டரும் சேர்ந்து கடந்த 14.06.1963–ம் தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ.4 மூலம் சர்வே எண்.351/1, 351/3 காலைகளில் மொத்தம் 1 ஏக்கர் நிலத்தை பிதுராஜ்ஜித சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதற்கு பிறகு வா.சா.ஆ.5 10.02.1982–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் லட்சுமண கவுண்டரின் வாரிசுகள் சேர்ந்து சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் எனது தாத்தா ராமசாமி கவுண்டருக்கு சர்வே எண்.348/1–ல் 1 ஏக்கரும், சர்வே எண்.349/1D–ல் பொதுவிடமும் சேர்த்து 91–1/2 சென்ட் சொத்தும் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் பிதுராஜ்ஜித வகையில் வந்த சொத்துக்களையும், அந்த பிதுராஜ்ஜித சொத்துக்களில் வந்த வருமானங்களை கொண்டு கிரையம் பெற்ற வகையில் வந்த சொத்துக்களையும் பாகம் பிரித்து கொள்வதாக கண்டு தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தா ராமசாமி கவுண்டர் 28.07.2016–ம் தேதியில் இறந்து போய்விட்டார். வாதிகள் பிறந்தது முதலே அவரது தகப்பனாரான ராமசாமிகவுண்டருடனும், எனது தந்தை சாமிநாதனுடனும் கூட்டாக தாவா சொத்துக்களை விவசாய வேலைகள் செய்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 1–ம் வாதி மணிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் தேதி எனக்கு தெரியாது, எனது அப்பாவிற்கு திருமணம் ஆவதற்கு முன்பாகவே 1–ம் வாதிக்கு திருமணம் நடந்து விட்டது. 2–ம் வாதி ராஜேஸ்வரிக்கு எனது அப்பாவிற்கு திருமணம் ஆன பிறகு திருமணம் நடந்தது. எனது அப்பாவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 கிரைய

ஆவணம் மூலம் சர்வே எண்.348/1L–ல் இருந்த 91 சென்ட் நிலத்தை வசந்தி என்பவருக்கு நானும், எனது அப்பா, எனது சகோதரி சுமதி மற்றும் வாதிகள் ஆகிய நாங்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டாக கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் கொடுப்பதாக சொல்லி தான் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் எங்களுக்கு பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் கொடுப்பதாக சொல்லி தான் கிரையம் கொடுத்துள்ளோம் என்றும், ஆனால் இந்த வழக்கிற்காக வேண்டி இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் பி.வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது தாத்தா ராமசாமி கவுண்டர் எனது அப்பா சாமிநாதன் பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய போது எனது தாத்தாவுடன் எனது அப்பாவும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உடன் சென்றிருந்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 15.03.2010–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போது எனது தாத்தா ராமசாமிகவுண்டர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார் என்றால் சரிதான். அந்த 15.03.2010–ம் தேதியில் தான் பி.வா.சா.ஆ.1 உயில் சாசனமும் ராமசாமி கவுண்டரால் எனது அப்பா சாமிநாதனுக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் ராமசாமி கவுண்டர் அவருடைய பெண் மக்களை குறிப்பிட்டு எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த உயில் சாசனம் எழுதும் போது ராமசாமி கவுண்டருடன் எனது அப்பாவும் இருந்தார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2

செட்டில்மெண்ட் ஆவணம், பி.வா.சா.ஆ.1 உயில் சாசனமும் ஒரே தேதியில் ஒரே சார்பதிவாளர் அலுலவலகத்தில் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் நான் பி.வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட போது எனது அப்பா எனது தாத்தாவுடன் இருந்தார் என்றும், பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம் ஏற்பட்ட போது எனது அப்பா எனது தாத்தாவுடன் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.25 15:31:10 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**